பக்கங்கள்: 07
# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 18 புதன்கிழமை 01.06.2022 கதிர் 100

## சபாநாயகர் தலைமையில் கட்சித் தலைவர்கள் கூட்டம்

நாளை நாடாளுமன்றத்தில்


நாடாளுமன்றம் எதிர்வரும் 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை கூடவுள்ளது. இந்நிலையில், நாடாளுமன்ற விவகாரங்கள் தொடர்பான குழுவின் கூட்டம் நாளை முற்பகல் 9.30 மணிக்கு நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் சபாநாயகர் மஹிந்த யாப்பா

☞2

## கட்சி முடிவை மீறி அமைச்சுப் பதவி பெற்ற நிமல், அமரவீரவுக்கு எதிராக நடவடிக்கை

சு.கவின் மத்திய செயற்குழு தீர்மானம்





கட்சியின் தீர்மானத்தை மீறி அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொண்ட நிமல் சிறிபால டி சில்வா மற்றும் மஹிந்த அமரவீர ஆகியோருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு முடிவெடுத்துள்ளது.

சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் கட்சி தலைவர்

☞2

## இலங்கையில் நிலவும் பொருளாதாரப் பிரச்சினையால்

# இம்முறை ஹஜ் யாத்திரிகர்களை அனுப்பாமல் இருக்கத் தீர்மானம்

இம்முறை ஹஜ் கடமைக்காக இலங்கையில் இருந்து யாத்திரிகர்களை மக்காவுக்கு அனுப்பாமல் இருக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில்நிலவும்பொருளாதாரப் பிரச்சினைகள் காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள்திணைக்களம் தெரிவித்தது.

தற்போதைய சூழ்நிலையில் ஏற்படும் செலவுகள் உள்ளிட்ட பொருளாதார நெருக்கடிகள் காரணமாக யாத்திரிகர்களை இம்முறை ஹஜ் கடமைக்கு அழைத்துச் செல்ல முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது என அமைச்சில் நடைபெற்ற பேச்சின்போது பிரதான முகவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் இம்முறை யாத்திரிகர்களை அழைத்துச் செல்வதில்லை என்ற தீர்மானம் எடுக்கப்பட்டு அதனை

☞2

# யாழ். நூலகம் எரிப்பு மிகப்பெரிய அவமானம்

## வெட்கித் தலைகுனிய தென்னிலங்கை; மாநகர மேயர் சீற்றத்துடன் தெரிவிப்பு



(இ.கலையமுதன்)

**கடந்த நூற்றாண்டினுடைய மிகப்பெரிய அவமானமே யாழ்ப்பாணம் பொது நூலகத்தின் எரிப்புச் சம்பவம். தென்னிலங்கையில் ஆட்சி மாற்றம் வேண்டும் என்று போராடும் அனைவரும் இந்தச் சம்பவத்தை எண்ணி இன்று வெட்கித் தலைகுனிய வேண்டும்.**

**- இவ்வாறு யாழ்ப்பாணம் மாநகர சபையின் மேயர் வி.மணிவண்ணன் தெரிவித்தார்.**

☞2

## இலங்கைக்குக் கடத்த இருந்த

## மூன்று கோடி ரூபா பெறுமதியான கடல் அட்டைகளுடன் ஒருவர் கைது

(ந.லோகதயாளன்)

இலங்கைக்குக் கடத்த இருந்த சுமார் 3 கோடி ரூபா மதிப்பிலான கடல் அட்டைகளுடன் ஒருவர் தமிழகப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## விமலின் தலைமையில் புதிய கூட்டணி உதயம்

பஸிலின் பிடிக்குள் இருந்து 21ஐ மீட்டெடுப்பதற்கு வியூகம்



நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார உட்பட 9 கட்சிகளின் பிரதிநிதிகள் இணைந்து

☞2



## இலங்கையிலிருந்து மேலும் மூவர் தமிழகத்தில் தஞ்சம்!

(ந.லோகதயாளன்)

கொழும்பைச் சேர்ந்த தாய், மகன் உள்ளிட்ட மூவர் படகு மூலம் தமிழகம் சென்று தஞ்சம் கோரியுள்ளனர்.

கொழும்பைச் சேர்ந்த ஜெசிந்தா மேரி, அவரது 10 வயதுடைய மகன் மற்றும் மன்னார் சிலாவத்துறையைச் சேர்ந்த அனிஸ்டன் உள்ளிட்ட மூவரே தமிழகத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

☞2

## பொலிஸ் துணைப் பரிசோதகர் வாகன விபத்தில் பரிதாபப் பலி

இரத்தினபுரியில் இடம்பெற்றவிபத்தில்பெல்மடுல்ல பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் துணைப் பரிசோதகர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் மாரப்பனை பிரதேசத்தைச் சேர்ந்த 56 வயதுடையவராவார்.

பொலிஸ் துணைப் பரிசோதகர் பயணித்த ஓட்டோ கட்டுப்பாட்டை இழந்ததால் எதிர்த்திசையில் வந்த லொறி மீது நேருக்கு நேர் மோதியதில் இந்தவிபத்துசம்பவித்துள்ளது.



விபத்தில் ஓட்டோவை ஓட்டிச்சென்ற பொலிஸ் துணைப் பரிசோதகர், படுகாயமடைந்து இரத்தினபுரி வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டபோது உயிரிழந்துள்ளார்.

லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் இரத்தினபுரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஸ்டாலின் கருத்து: அலட்டமாட்டோம்!

பந்துல கூறுகின்றார்



கச்சதீவு தொடர்பில் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள கருத்து தொடர்பில் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை. அது அவரின் தனிப்பட்ட கருத்து. இந்திய அரசின் நிலைப்பாடு அல்ல என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான

☞2

## ரயிலுடன் மோதியது கார்; 2 பேர் வைத்தியசாலையில்

கரையோர சேவைகள் பாதிப்பு

பூஸா ரயில் நிலையத்துக்கு அருகில் வாகனம் ஒன்று இன்று காலை ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளானமையால், கரையோர ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

மாத்தறையிலிருந்து பயணித்த சாகரிகா ரயிலில், கார்ஒன்றுமோதியதில்இந்தவிபத்துஇடம்பெற்றுள்ளது.

இதன்போது, காரில் பயணித்த இருவர் படுகாயமடைந்துள்ளனர் என்றும், அவர்கள் வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ‘21’ஐத் தோற்கடிக்கச் சூழ்ச்சி!



சுதந்திரக் கட்சி குற்றச்சாட்டு

அரசமைப்பின் 21 ஆவது திருத்தச் சட்டமூலத்தை தோற்கடிப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர எம்.பி. தெரிவித்தார்.

இதன் ஓர் அங்கமாகவே, தற்போதைய சூழ்நிலையில் உணவு தான் முக்கியம், அரசமைப்பு மறுசீரமைப்பு அவசியமில்லை என்ற பரப்புரை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே, 21ஆவதுதிருத்தச்சட்டமூலம்கட்டாயம்நிறைவேற்றப்பட வேண்டும் எனவும் தயாசிறி ஜயசேகர வலியுறுத்தினார்.

## விமலின் தலைமையில் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதியதொரு ‘அரசியல் கூட்டணி’யை உருவாக்கும் முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளனர்.

கூட்டணிக்கான பெயர் மற்றும் கொள்கைத் திட்டங்கள் தொடர்பில் தற்போது ஆராயப்பட்டு வருகின்றது என்று ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

‘கூட்டு தலைமைத்துவம்’ என்பது பிரதான இலக்காக இருந்தாலும், தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்சவே ’தலைவர்’ என்ற அந்தஸ்திலிருந்து செயற்படுவார் எனவும் வாசு குறிப்பிட்டார்.

புதிய கூட்டணியானது, அடுத்த பொதுத்தேர்தலில் களமிறங்கினால், பிரதமர் வேட்பாளர் யார் என்ற வினாவுக்கான பதிலையும் வாசுதேவ நாணயக்கார வெளியிட்டுள்ளார். ’விமல் வீரவன்ச’ அதற்கு பொருத்தமானவர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

9 கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்ற விசேட கூட்டம் நேற்று மாலை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி தலைமையகத்தில் நடைபெற்றது.

இதன்போது அரசமைப்புக்கான உத்தேச 21 ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. முன்வைக்கப்பட வேண்டிய திருத்தங்கள் சம்பந்தமாகவும் பேசப்பட்டுள்ளன. அந்தவகையில் 9 கட்சிகளின் யோசனை நீதி அமைச்சருக்கு இன்று அனுப்பிவைக்கப்படும் என விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

21 ஐ தோற்கடிப்பதற்கு பஸில் ராஜபக்ஷ முற்பட்டாலும், அதனை முறியடிப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என 9 கட்சிகளின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, புதிய அரசியல் கூட்டணியை உருவாக்குவதற்காக முன்னெடுக்கப்படும் நகர்வுகள் தொடர்பிலும் இக்கூட்டத்தில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. புதியகட்சிகளையும், அமைப்புகளையும் இணைத்துக்கொள்வதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி அரசுக்கு வழங்கிவந்த ஆதரவை, தேசிய சுதந்திர முன்னணி, ஜனநாயக இடதுசாரி முன்னணி, புதிய ஹெல உறுமய, இலங்கை கம்யூனிஸ் கட்சி, லங்கா சமமாஜகக்கட்சி, தேசிய காங்கிரஸ், யுதுகம உட்பட 10 கட்சிகள் மீளப்பெற்றன.

இதனையடுத்து அக்கட்சிகள் நாடாளுமன்றத்தில் சுயாதீன அணியாகச் செயற்பட்டது. இக்கூட்டணியில் இடம் பெற்றிருந்த டிரான் அலஸ், அரசை ஆதரித்து, அமைச்சு பதவியைப் பெற்றுக் கொண்டுள்ளார். இதனால 10 கட்சி கூட்டணியில் இருந்து அவரின் கட்சி வெளியேற்றப்பட்டுள்ளது. தற்போது 9 கட்சிகள் செயற்படுகின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் 9 கட்சிகளுடன் அரசியல் உறவு இருக்கின்றது. எனினும், புதிய கூட்டணியில் இடம் பெறுவது சம்பந்தமாக அக்கட்சி இன்னும் முடிவு எடுக்கவில்லை. ஆனால், தேர்தலொன்று வரும்பட்சத்தில் அக்கட்சிகளுடன் இணையும் சாத்தியமே காணப்படுகின்றது.

21 ஆவது திருத்தச் சட்டமூலத்தை தோற்கடிப்பதற்கான நகர்வுகள் இடம் பெற்று வருகின்றன என்ற அச்சத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் வெளியிட்டிருக்கின்றது.

## மூன்று கோடி ரூபா ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்நாட்டின் இராமநாதபுரம் மாவட்டம், பட்டிணம் காத்தான் பகுதியில் இருந்து இலங்கைக்குக் கடத்துவதற்காகப் பதப்படுத்தப்பட்ட 200 கிலோ கடல் அட்டைகளை வாகனத்தில் ஏற்றிக்கொண்டு இருந்தபோது, பட்டணம் காத்தான் புறவழிச் சாலைப் பகுதியில் கேணிக்கரைப் பொலிஸார் இருவரை சந்தேகத்தின் பேரில் விசாரணை செய்ததில் அவர்களில் ஒருவர் தப்பியோடினார்.

மற்றைய நபர் கைதுசெய்யப்பட்டு தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்ட போது இலங்கைக்குப் படகு மூலம் கடல் அட்டைகள் கடத்தப்பட இருந்தமை தெரியவந்தது.

அவரிடம் இருந்த சுமார் 3 கோடி ரூபா மதிப்பிலான 200 கிலோ பதப்படுத்தப்பட்ட கடல் அட்டைகள் பறிமுதல் செய்யப்பட்டதுடன் தொடர்ந்து விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

## ஸ்டாலின் கருத்து: ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது, ‘இந்தியப் பிரதமர் மோடி பங்கேற்றிருந்த நிகழ்வொன்றின்போது, இலங்கை வசமுள்ள கச்சத்தீவை மீளப் பெறுவதற்கு இதுவே சிறந்த தருணம் என்று தமிழக முதல்வர் குறிப்பிட்டிருந்தார். இது தொடர்பில் இலங்கை அரசின் நிலைப்பாடு என்ன? என்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் பந்துல குணவர்தன,

ஒவ்வொரு நாட்டிலும் மாநிலங்களில் உள்ள அரசியல் தலைவர்களின் கருத்துக்கள் மாறுபடலாம். உதாரணமாக வடக்கு மாகாண முதலமைச்சர் பதவியை விக்னேஸ்வரன் வகித்தபோது, அவர் பலவிதமான அறிவிப்புகளை வெளியிட்டிருந்தார். இவை அரசின் நிலைப்பாடு அல்ல. அவற்றை அரசின் நிலைப்பாடாக சர்வதேசமும் ஏற்காது. அந்தவகையில் தனது தனிப்பட்ட கருத்தை தமிழக முதல்வர் வெளியிட்டிருக்கலாம். இது தொடர்பில் பிரதமர் மோடி எந்தவொரு பதிலையும் வழங்கவில்லை. இதன்மூலம் இந்தியாவின் நிலைப்பாடு மாறவில்லை என்பதை அறியமுடிகின்றது. - என்றார்.

## இலங்கையிலிருந்து .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த மூவரும் மன்னார் - பேசாலை கடற்கரையில் இருந்து நேற்றிரவு படகொன்றில் சென்று இன்று அதிகாலை தனுஷ்கோடிக்கு அருகில் உள்ள கோதண்டராமர் கடற்கரைப் பகுதியைச் சென்றடைந்துள்ளனர்.

இது குறித்து தகவல் அறிந்த மண்டபம் கடலோரக் காவல் படையினர் மூவரையும் மீட்டு விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைக் காரணம் காட்டி கடந்த மார்ச் மாதம் 22ஆம் திகதி முதல் இன்று ஜூன் மாதம் 1ஆம் திகதி வரையில் 83 பேர் கடல் மார்க்கமாகத் தமிழகம் சென்றுள்ளனர்.

## யாழ். நூலகம் எரிப்பு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் பொது நூலகம் தீயூட்டி எரிக்கப்பட்டமையின் 41ஆம் ஆண்டு நினைவேந்தல் இன்று அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ். மாநகர சபையின் ஏற்பாட்டில் இன்று காலை 9.30 மணியளவில் யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் இந்த நினைவேந்தல் இடம்பெற்றது.

இதன்போது யாழ்ப்பாணம் பொது நூலகத்தை உருவாக்குவதற்குக் காரணகர்த்தாவாக விளங்கிய செல்லப்பாவுக்கும், யாழ். பொது நூலகம் எரியூட்டப்பட்டதை அறிந்து உயிரிழந்த தாவீது அடிகளாருக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ். மாநகர மேயர் வி.மணிவண்ணன், பிரதி மேயர் து.ஈசன், யாழ். மாநகர ஆணையாளர் ஜெயசீலன், யாழ். பொது நூலக பிரதம நூலகர், யாழ். மாநகர சபை உறுப்பினர்கள், வாசகர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணம் பொது நூலகம் 1981 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 1ஆம் திகதி தென்னிலங்கையிலிருந்து வந்த வன்முறைக் குழுவொன்றால் தீயூட்டப்பட்டது. நூலகம் எரிக்கப்பட்ட காலத்தில், அங்கு சுமார் 97 ஆயிரம் அரிய நூல்கள் இருந்ததுடன், தென்கிழக்காசியாவி லேயே மிகப்பெரிய நூலகமாகவும் அது திகழ்ந்தது.

இன்றைய நினைவேந்தல் நிகழ்வில் யாழ். மேயர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோது,

யாழ்ப்பாணத்தின் மிகப்பெரிய சொத்தாக இருக்கக்கூடிய இந்த நூல் நிலையம் எரித்து அழிக்கப்பட்டு இன்றுடன் 41 வருடங்கள் நிறைவடைகின்றன. தென்னாசியாவிலேயே மிகப்பெரிய நூலகமாகத் திகழ்ந்த இந்த நூலகம் தீயிட்டு எரிக்கப்பட்டது.

விலைமதிப்பற்ற எத்தனையோ புத்தகங்கள் இல்லாமல் ஆக்கப்பட்டன. தமிழ் மக்களின் சொத்தாகக் கருதப்படுவது கல்வி என்ற மூலதனம் மட்டும்தான்.

கல்வியை இல்லாமல் ஆக்கி தமிழ் மக்களை வீழ்த்தவேண்டும் என்ற எண்ணத்துடன் இந்தச் சம்பவம் நடத்தப்பட்டது.

இன்று நாடு எதிர்நோக்கி இருக்கின்ற பொருளாதாரப் பிரச்சினைகளுக்குக் காரணமான பல அத்திவாரக் கற்களில் இந்த நூலக எரிப்பு ஒரு பிரதானமான அத்திவாரக் கல்லாகக் காணப்படுகிறது.

1981ஆம் ஆண்டு அரச அனுசரணையுடன் இந்த நூலகம் எரித்து அழிக்கப்பட்டது. நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைக்கு இதுதான் முதல் அத்திவாரக் கல்லாக உள்ளது எனக் கருதுகின்றோம்.

தென்னிலங்கையில் ஆட்சி மாற்றம் வேண்டும் என்று போராடும் அனைவரும் இந்தச் சம்பவத்தை எண்ணி இன்று வெட்கித் தலைகுனிய வேண்டும்.

கடந்த நூற்றாண்டினுடைய மிகப் பெரிய அவமானம் யாழ். பொது நூலகத்தின் எரிப்புச் சம்பவம். தற்போது தென்னிலங்கையில் போராடுகின்றவர்கள் யாழ். பொது நூலகம் எரிப்புச் சம்பவத்தின் விளைவும், போருக்குள் தள்ளப்பட்டதன் விளைவும்தான் இன்று நடுவீதியில் நிற்பதற்குக் காரணம் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இனவாதம் அற்ற ஒரு நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு நாம் தயாராக இருக்கின்றோம் என்ற செய்தியை உலகத்துக்குப் பறைசாற்றாமல், இந்த நாட்டினுடைய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாது என்பதனை தென்னிலங்கையில் உள்ளவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

தமிழ்மக்கள் இந்த அழிவுகளிலிருந்து மீண்டு வருகின்றார்கள். இந்த நூலகத்தைப் புதுப் பொலிவுடன் மிளிரச் செய்ய வேண்டும். இந்த நூலகம் உலகில் மிகச் சிறந்த நூலகமாக மாறுவதற்கு உறுதி பூண்டு, எதிர்காலத்தில் நாம் ஒற்றுமையுடன் பயணிக்க வேண்டும் - என்றார்.

## கட்சி முடிவை மீறி ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று நடைபெற்றது.

நிமல் சிறிபால டி சில்வா மற்றும் மஹிந்த அமரவீர ஆகியோருக்குக் கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை.

இந்தக் கூட்டத்தில் சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளன. குறிப்பாக நிமல் சிறிபால டி சில்வா மற்றும் மஹிந்த அமரவீர ஆகியோர் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இவர்கள் இருவர் தொடர்பில் கடுமையான தீர்மானம் எடுக்கப்பட வேண்டும் என மத்திய குழு உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளனர். இதற்கமையவே நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## இம்முறை ஹஜ் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உருவாகியுள்ளது என அமைச்சில் நடைபெற்ற பேச்சின்போது பிரதான முகவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் இம்முறை யாத்திரிகர்களை அழைத்துச் செல்வதில்லை என்ற தீர்மானம் எடுக்கப்பட்டு அதனை அவர்கள் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்துக்கு அறிவித்துள்ளனர்.

இந்தத் தீர்மானம் நேற்று சவூதி அரசுக்கு அறிவிக்கப்பட்டது எனத் திணைக்களத்தின் பணிப்பாளர் இப்ராஹிம் அன்சார் தெரிவித்தார்.

## சபாநாயகர் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அபேவர்தன தலைமையில் நடைபெறவுள்ளது.

நாடாளுமன்றத்தில் எதிர்வரும் நாட்களில் நடைபெறவுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் இந்தக் கூட்டத்தில் முடிவெடுக்கப்படவுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களது உணவு விவகாரம் தொடர்பாகவும் இந்தக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்படும்.

நாடாளுமன்றத்தால் வழங்கப்படும் உணவு தமக்குத் தேவையில்லை, வெளியில் இருந்து கொண்டுவந்து உண்பதற்கு அனுமதிக்குமாறு எம்.பிக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்-
076 443 8622




மணமகன் விபரம் | மணமகன் விபரம்

**பிறந்த திகதி :** 10.06.1987
**ஜாதி:** V ஆண்
**மதம் :** இந்து
**கல்வி தகைமை :** Msc Engineer
**எதிர்பார்ப்பு :** கனடா அல்லது அவுஸ்திரேலியா மணமகள்

**பிறந்த திகதி :** 26.09.1990
**ஜாதி:** N ஆண்
**மதம் :**இந்து
**நட்சத்திரம் :** திருவோணம் 2 ல் செவ்வாய்
**கல்வி தகைமை :** Bsc தொழில் : அரச உத்தியோகத்தா
எதிர்பார்ப்பு : அழகான மணமகள்

**பிறந்த திகதி:** 11.08.1994
**ஜாதி:** P செவ்வாய் குற்றமுடையவர்
**எதிர்பார்ப்பு:** ஒரே குலத்தை சோந்த அழகிய மணமகள்

**பிறந்த திகதி:** 1981.04.25
**ஜாதி:** V ஆண்
**மதம் :** இந்து
**கல்வி தகைமை :** A/L
**தொழில்:** சொந்த தொழில்
**எதிர்பார்ப்பு :** ஜரோப்பிய நாட்டு இலங்கை தமிழ் பெண்

**பிறந்த திகதி :** 27.12. 1989
**மதம் :** இந்து
**ஜாதி :** V பெண் செவ்வாய் குற்றமுடையவர்
**கல்வி தகைமை :** MBA
**தொழில்:** கனடா பிரஜை
**எதிர்பார்ப்பு :** கனடா மணமகன்

**பிறந்த திகதி :** 3.11.1995
**மதம் :** இந்து
**ஜாதி :** V பெண்
**கல்வி தகைமை:** University
**எதிர்பார்ப்பு :** வெளிநாட்டு மணமகன்

**பிறந்த திகதி :** 01.01.1992
**மதம் :** இந்து .
**ஜாதி :** Pபெண்
**கல்வி தகைமை:** NCAT.
**எதிர்பார்ப்பு :** உள்ளூர் அரச சேவை மணமகன்

**பிறந்த திகதி :** 17.05.1998
**மதம் :** இந்து .
**ஜாதி ::**P பெண் செவ்வாய் குற்றமுடையவர்
**கல்வி தகைமை:** AL
**எதிர்பார்ப்பு :**உள்நாடு – வெளிநாட்டு மணமகன்

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## வரலாற்று உத்தரவு

தமக்குள்ள பொதுமன்னிப்பு அதிகாரத்தின் கீழ் துமிந்த சில்வாவை விடுதலை செய்த ஜனாதிபதியின் தற்றுணிவுத் தீர்மானம் உயர்நீதிமன்றத்தில் கேள்விக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றது.

இந்த விவகாரத்தில், மூல விடயத்திற்கான விசாரணைக்குள் இறங்க முன்னரே, ஜனாதிபதியின் பொதுமன்னிப்பு அதிகாரத்தைக் கேள்விக்கு உள்ளாக்கும் விதத்தில், அந்தப் பொது மன்னிப்பு உத்தரவை இடைநிறுத்தி, உயர் நீதிமன்றம் கட்டளை பிறப்பித்தமை மிக முக்கிய விடயமாகக் கருதப்படுகின்றது.

பொதுமன்னிப்பு அளிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்குரிய தனித்துவமான தற்றுணிவு விடயம் என்ற வகையில் அதில் யாரும் தலையிட முடியாது, அது முற்றிலும் ஜனாதிபதியின் சுய தீர்மானத்துக்கு மட்டுமே உரியது என்று இதுவரை காலமும் கருதப்பட்டு வந்தது. அந்த எண்ணத்தில்தான் இதுவரை இருந்த ஜனாதிபதிகளும் செயற்பட்டும் வந்தனர்.

அது அப்படியல்ல, ஜனாதிபதி அந்த அதிகாரத்தை பிரயோகிக்கையில் தான்தோன்றித்தனமாக நடக்க முடியாது, நீதி, நியாயமாக மட்டுமே செயற்பட்டு, அந்த அதிகாரத்தை பிரயோகிக்க முடியும், பிரயோகிக்க வேண்டும் என்ற கருத்தியலை உயர் நீதிமன்றத்தின் இப்போதைய தடை உத்தரவு பிரதிபலித்து நிற்கின்றது.

பொதுமன்னிப்பு அளித்தல் ஜனாதிபதியின் தற்றுணிவு அதிகாரம் என்பதால் அத்தகைய பொதுமன்னிப்பு ஒன்றுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்படும் வழக்குகளை உயர் நீதிமன்றம் பெரும்பாலும் விசாரணைக்குக் கூட ஏற்காது என்பதே பொதுவான கருத்தாக இருந்து வந்தது.

ஆனால் துமிந்த சில்வாவின் வழக்கில் அத்தகைய மனுவை உயர் நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுக் கொண்டமை மட்டுமல்லாது, முதல் நிலையில் அந்த பொதுமன்னிப்பு உத்தரவை இடை நிறுத்தி வைத்துவிட்டு, அதுகுறித்து – அதன் நியாயத்தன்மை குறித்து – விசாரணை நடத்தத் தீர்மானித்திருக்கின்றது.

அது மட்டுமல்லாமல், அரசியல் அதிகாரங்கள் தனக்கு எல்லையற்று இருக்கின்றன, அதற்கு வரம்பு இல்லை என்ற எண்ணப் பாங்கோடு செயல்படும் நிறைவேற்றுத் துறைக்கு உயர் நீதிமன்றம் வைத்த முதல் 'செக்'காக இதைக் கருதலாம்.

சட்டரீதியான நீதிமன்றம் ஒரு தண்டனைத் தீர்ப்பு வழங்க முன்னர், குற்றங்களை விசாரிக்காமலேயே தடுப்புக் காவலில் இருந்த பன்னீராயிரம் முன்னாள் போராளிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கிய முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் செயல் சட்ட சர்ச்சைக்கு உள்ளாகவில்லை.

தன்னைக் கொலை செய்ய முயற்சித்த சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட புலிப் போராளியை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொது மன்னிப்பு அளித்து விடுதலை செய்த முடிவும் சட்ட சர்ச்சையைக் கிளப்பவில்லை. அதுவும் கூட, சட்டரீதியான நீதிமன்றம் ஒன்றின் தீர்ப்பு இல்லாத நிலையில் வழங்கப்பட்ட மன்னிப்பு.

அதோடு, இவை இரண்டும் தனிப்பட்ட அரசியல் நலன்களை இலக்கு வைத்து அந்தந்த ஜனாதிபதிகளினால் வழங்கப்பட்ட பொது மன்னிப்புகள் அல்ல.

ஆனால் இப்போது சட்ட சர்ச்சைகளுக்கு உள்ளாகியிருக்கும் பொதுமன்னிப்புகளெல்லாம் சம்பந்தப்பட்ட இரு ஜனாதிபதிகளும், தத்தமது அரசியல் விருப்பு, வெறுப்புக்கள், நலன்களை முன்னிறுத்தி எடுத்த முடிவுகள் என்ற அர்த்தப்படுத்தலும் கொண்டவைதான் என்பது மறுக்கற்பாலதல்ல.

நிறைவேற்று அதிகாரத்திற்கு எதிராக பொதுமக்களின் சீற்றம் நாடளாவிய ரீதியில் கிளர்ந்துள்ள இச்சமயத்தில், அந்த அதிகாரத்துக்கு எல்லை வரம்புகளைப் போடும் தனது தேசக் கடப்பாட்டை உயர்நீதிமன்றமும் செயற்படுத்த முன் நிற்கின்றது என்ற எண்ணத்தையே தற்போதைய இடைக்கால உத்தரவு தந்து நிற்பதும் கவனிக்கத்தக்கது.

# சர்வதேச நாடுகள் அச்சமின்றி உதவுவதற்கு முன்வரவேண்டும்

## அரசாங்கம் கோரிக்கை

நாட்டில் சர்வகட்சி அரசாங்கமொன்று அமைக்கப்பட்டு நிர்வாகம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அதற்கமைய நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

எனவே இலங்கைக்கு உதவ சர்வதேச நாடுகள் முன்வர வேண்டும் என்று அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற போது, சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட அமைப்புக்கள் இலங்கையில் அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்படுத்தப்பட்டால் மாத்திரமே உதவ முடியும் என்று அறிவித்துள்ளமை தொடர்பில் கேட்கப்பட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது புதிய பிரதமரின் கீழ் சர்வகட்சி அரசாங்கம் அமைக்கப்பட்டுள்ளது. சர்வகட்சி அரசாங்கம் எனும் போது அதில் அங்கத்துவம் வகிக்கும் கட்சிகளின் பிரதிநிதித்துவத்துக்கு அமையவே அமைச்சுக்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே இவ்வாறு அமைச்சுக்களை வழங்குவதற்கான தெரிவில் காணப்பட்ட சிக்கலே அந்த நியமனங்களிலும் தாமதத்தை ஏற்படுத்தியது. எவ்வாறிருப்பினும் தற்போது மட்டுப்படுத்தப்பட்டளவில் முக்கிய அமைச்சுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

அமைச்சர்களுக்கான பணிகள் தொடர்பாக வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படாவிட்டாலும் அவர்கள் தமது பணிகளை ஆரம்பித்து சிறப்பாக முன்னெடுத்து வருகின்றனர். விரைவில் இராஜாங்க அமைச்சுக்களுக்கான நியமனங்களும் வழங்கப்படும்.

எனவே நாட்டில் தற்போது அரசியல் ஸ்திரத்தன்மை இல்லை என்று கூற முடியாது. அதே போன்று மேலும் பல அத்தியாவசிய தேவைகளுக்கான நியமனங்களும் விரைவில் வழங்கப்படும்.

போக்குவரத்து அமைச்சர் என்ற வகையில் பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்தும் பயணிகளுக்கு சலுகைகளை வழங்கக் கூடிய வகையிலான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளேன்.

அதற்கமைய எதிர்வரும் 15 ஆம் திகதியின் பின்னர் பொதுப் போக்குவரத்தில் ஏற்படுத்தப்படவுள்ள மாற்றங்கள் தொடர்பில் விரைவில் அதிகரிக்கப்படும். இவ்வாறு சகல அமைச்சர்களும் தமது பணிகளை திட்டமிட்டு முன்னெடுத்து வருகின்றனர். – என்றார்.

# அரச ஊழியர்களின் சம்பள விவகாரத்தில் கொள்கை ரீதியான தீர்மானங்கள் அவசியம்

## பந்துல குணவர்தன தெரிவிப்பு

அரச ஊழியர்களின் சம்பள விவகாரத்தில் கொள்கை ரீதியிலான தீர்மானங்களே எடுக்கப்பட வேண்டும். காரணம் தேசிய வரி வருமானத்தில் 86 சதவீதம் அரச ஊழியர்களுக்கான சம்பள கொடுப்பனவிற்கும், ஓய்வூதியம் வழங்குவதற்கும் செலவிடப்படுவதாக அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரச மற்றும் தனியார் துறையினருக்கான சம்பள அதிகரிப்பு தொடர்பில் நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கேட்கப்பட்ட போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அரச ஊழியர்களின் சம்பள விவகாரம் தொடர்பில் கொள்கை தயாரிப்பாளர்கள் தொழிநுட்ப ரீதியிலான தீர்மானத்தை எடுக்க வேண்டும்.

காரணம் மாதாந்தம் அரசாங்கத்துக்கு கிடைக்கப் பெறும் வரி வருமானத்தில் 86 சதவீதம் அரச உத்தியோகத்தர்களுக்கான சம்பளக் கொடுப்பனவிற்கும் ஓய்வூதியத்தை வழங்குவதற்கும் செலவிடப்படுகிறது.

இவ்வாறு வருமானத்தில் பெருந்தொகை இதற்காக செலவிடப்பட்டால் ஏனைய செலவுகளுக்கு என்ன செய்வது?

இதன் காரணமாகவே நாட்டில் கால காலமாக கடன் பெறப்படுகிறது. இந்த முறைமையே தொடர்ந்தும் பின்பற்றப்பட்டு வருகிறது. இவ்வாறு பெறப்பட்ட கடன்களினாலேயே தற்போதைய நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இந்த கடன்களை மீளச் செலுத்துவதிலும் பாரிய சிக்கல் காணப்படுகிறது. அதன் அடிப்படையிலேயே அரச ஊழியர்களுக்கான சம்பளம் தொடர்பில் கொள்கை ரீதியிலான தீர்மானத்தை எடுக்க வேண்டியதன் அவசியம் உணரப்பட்டது.

எவ்வாறிருப்பினும் சகலருக்கும் நிவாரணம் வழங்கும் வகையிலான வரவு – செலவுத் திட்டமொன்றை விரைவில் முன்வைக்கவுள்ளேன் என பிரதமர் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பிலும் இவ்வாரம் இடம்பெற்ற அமைச்சரவையில் அவதானம் செலுத்தப்பட்டது. விரைவில் அதனை முன்வைக்க அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது. – என்றார்.

அண்மையில் அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார் எனச் செய்திகள் வெளியாகியிருந்தன.

எனினும் அவை உண்மைக்குப் புறம்பான செய்திகள் என்று பிரதமர் அலுவலகம் மறுப்பு வெளியிட்டிருந்தது. எவ்வாறிருப்பினும் பிரதமர் தெரிவித்துள்ளமையைப் போன்று நிவாரண வரவு – செலவுத் திட்டத்தில் சம்பள அதிகரிப்பு உள்ளடக்கப்பட்டிருக்குமா என்று மக்கள் மத்தியில் கேள்வி எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மரக்கறி சந்தை மூடப்படும் அபாயம் போக்குவரத்து நெருக்கடி காரணமாம்

மெனிங் சந்தை உள்ளிட்ட காய்கறிச் சந்தைகள் மூடப்படும் அபாயத்தை எதிர்கொண்டுள்ளன என காய்கறி வர்த்தகர் சங்கம் எச்சரித்துள்ளது.

தற்போதைய போக்குவரத்து நெருக்கடி காரணமாக விவசாயிகளின் உற்பத்திகள் மெனிங் சந்தை மற்றும் பொருளாதார மத்திய நிலையங்களுக்கு எடுத்து வரப்படுவதில் பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

போக்குவரத்து நெருக்கடி காரணமாக காய்கறிகளுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டு அவற்றின் விலை கடுமையாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

தக்காளி ஒரு கிலோ 700 ரூபா வரை உயர்ந்துள்ளது. ஏனைய காய்கறிகளும் அவ்வாறே விலை அதிகரிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் மெனிங் சந்தை வர்த்தகர்கள் தாங்களே வாடகை வாகனங்கள் மூலம் போக்குவரத்து ஏற்பாடுகளை மேற்கொண்டு விவசாயிகளிடம் நேரடியாக காய்கறிகளை கொள்வனவு செய்யும் தீர்மானத்துக்கு வந்துள்ளனர்.

எனினும் போதுமான அளவில் காய்கறிகள் கிடைக்காத பட்சத்தில் பொருளாதார மத்திய நிலையங்கள் மட்டுமன்றி மெனிங் சந்தையும் மூடப்படும் அபாயத்தை எதிர்கொண்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ரஷ்யாவில் இருந்து உரங்கள், தானியங்கள் ஏற்றுமதிக்கு அமெரிக்கா ஆதரவு வழங்கியது

ரஷ்ய படைகளின் தாக்குதலால் செவெரோடோனெட்ஸ் பகுதியின் உள்கட்டமைப்பு முற்றிலும் அழிக்கப்பட்டுள்ளது எனஉக்ரைன்குற்றம்சாட்டியுள்ளது.

உக்ரைனுக்கு ஆயுத உதவி வழங்குவது குறித்து, அமெரிக்க பாதுகாப்புத் துறை செயலாளர் லாயிட் ஆஸ்டின், உக்ரேனிய பாதுகாப்பு மந்திரி ஒலெக்ஸி ரெஸ்னிகோவ் உடன் தொலைபேசி மூலம் ஆலோசனை நடத்தினார். உக்ரைன் பாதுகாப்பை பலப்படுத்துதல், போரிடுவதற்கு ஆயுத விநியோகம் குறித்து விவாதம் நடைபெற்றதாக ரெஸ்னிகோவ் தமது டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார். அண்மையில் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் உக்ரைனுக்கு 40 பில்லியன் டொலர் உதவி வழங்கும் உத்தரவில் கையெழுத்திட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

ரஷ்யாவில் இருந்து உரங்கள் மற்றும் தானியங்கள் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதை ஆதரிப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. ஐ.நா. சபை தலைமையகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய ஐ.நாவிற்கான அமெரிக்க தூதர் லிண்டா தாமஸ், உக்ரைனில் நடைபெறும் போரினால் உலகளாவிய உணவுப் பாதுகாப்பின்மை பெரிய அளவில் அச்சுறுத்தலாக உள்ளது என்றார். இதை நிவர்த்தி செய்ய ரஷ்யாவில் இருந்து தானியங்கள் மற்றும் உரங்களை ஏற்றுமதி செய்வதை பைடன் அரசு ஆதரிக்கிறது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைன் மீது தாக்குதல் நடத்தி வரும் ரஷ்யா மீது புதிய பொருளாதார தடை விதிக்கும் நடவடிக்கையாக அந்நாட்டில் இருந்து மசகு எண்ணெய் இறக்குமதியில் மூன்றில் இரண்டு பங்குக்கு மேல் தடை விதிக்கும் திட்டத்தை ஐரோப்பிய ஒன்றியம் ஏற்றுக் கொண்டுள்ளது. இந்த நடவடிக்கை



மூலம் இந்த ஆண்டு இறுதிக்குள் ரஷ்யாவில் இருந்து 90 சதவீத கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யப்படுவது குறையும் என்று ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய படைகள் செவெரோடோனெட்ஸ் பகுதியை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முயற்சிப்பதாகவும், தங்கள் படையினர் பதிலடி கொடுத்து வருகின்றனர் எனவும் உக்ரேனிய ராணுவ அதிகாரி தெரிவித்துள்ளார். ரஷ்ய படைகளின் தாக்குதலால் அந்த நகரத்தில் 90 சதவீத வீடுகள் சேதமடைந்துள்ளன, முக்கியமான உள்கட்டமைப்பு முற்றிலும் அழிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார். இந்த போரில் மக்களின் உயிரைப் பணயம் வைப்பதில் எந்த அர்த்தமும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவின் பொருளாதார தடை காரணமாக ரஷ்யாவில் உற்பத்தியாகும் மசகு எண்ணெயை வாங்க பல நாடுகள் அஞ்சி வருகின்றன. இதற்கிடையே, இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகள் தள்ளுபடி விலையில் மசகு எண்ணையைப் பெற்று வருகின்றன. இந்நிலையில், ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினின் பார்வை இந்தியா மற்றும் சீனா பக்கம் திரும்ப வாய்ப்புள்ளது.

உக்ரைன் மீது ரஷ்ய படைகள் நடத்தி வரும் போர் 3 மாதத்தைக் கடந்துள்ளது. பல இடங்களில் பொதுமக்கள் குடியிருப்புகள் மீது ரஷ்ய படைகள் ஈவிரக்கமின்றி தாக்குதல் நடத்தின என உக்ரைன் குற்றம் சாட்டி வருகிறது. இதற்கிடையே, போர்க்குற்றத்தில் ஈடுபட்டனர் என 2 ரஷ்ய ராணுவ வீரர்கள் மீது உக்ரைன் குற்றம்சுமத்தி வழக்கு விசாரணை நடத்தியது. இந்நிலையில், இருவருக்கும் தலா 111/2 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து உக்ரைன் நீதிமன்றம் உத்தரவிட்டது. ரஷ்யாவின் கேஸ்ப்ரோம் நிறுவனம் நெதர்லாந்திற்கு எரிவாயு விநியோகிப்பதை நிறுத்தியதாக அறிவித்துள்ளது.

உக்ரைனுக்கு எதிரான போரை கண்டிக்கும் விதமாக ரஷ்யா மீது அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட நாடுகள் பொருளாதார தடைகளை விதித்துள்ளன. இருப்பினும் அதில் சில நாடுகள் ரஷ்யாவிடம் இருந்து மசகு எண்ணெய்யை கொள்முதல் செய்து வருகிறது. இந்நிலையில் மசகு எண்ணெய் கொள்முதலை இந்த ஆண்டு இறுதிக்குள் 90% நிறுத்த ஐரோப்பிய ஒன்றியம் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

உக்ரைனின் மெலிடோபோல் நகரில் கார் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் பலர் படுகாயம் அடைந்துள்ளனர். அந்த நகரம் தற்போது ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் உள்ளது. ரஷ்ய படைகளை எதிர்ப்போர் இந்த சதி வேலையில் ஈடுபட்டிருக்கலாம் என்று விசாரணைக்குழு தெரிவித்துள்ளது. மெலிடோபோல் நகரை, நிர்வாகம் செய்ய ரஷ்யாவால் நியமிக்கப்பட்ட அதிகாரி தங்கியிருந்த கட்டடத்திற்கு அருகே இந்த கார் குண்டு வெடிப்பு நிகழ்த்தப்பட்டுள்ளதாக மேயர் இவான் பெடோரோவ் தெரிவித்துள்ளார்.


ரஷ்யா, உக்ரைன் இடையேயான போர் முடிவுக்கு வர உதவுவதற்கு தயாராக இருப்பதாக துருக்கி அதிபர் ரெசெப் தையிப் எர்டோகன் ரஷ்ய அதிபர் புடின் உடனான உரையாடலின் தெரிவித்துள்ளார். இதற்காக இஸ்தான்புல் நகரில் ரஷ்யா, உக்ரைன் மற்றும் ஐ.நா.சபை அதிகாரிகளை சந்தித்து பேசவும் தயார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைனின் டான்பாஸ் பகுதியில் உக்ரைன் ராணுவ நிலைகளை ரஷ்யப் படையினர் தொடர்ந்து தாக்கி வருகின்றனர். இது குறித்து செய்தி சேகரிக்க சென்ற பிரான்ஸ் ஊடகவியலாளர் ஒருவர் ரஷ்யா நடத்திய பீரங்கித் தாக்குதலுக்கு பலியானார் என உள்ளூர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவை நேரடியாக தாக்கும் ஏவுகணைகளை உக்ரைனுக்கு அமெரிக்கா வழங்காது என்று அந்நாட்டு அதிபர் ஜோ பைடன் தெரிவித்துள்ளார். பைடன் அரசு ரஷ்யாவிற்கு எதிராக போரிடுவதற்கு உக்ரைன் நாட்டிற்கு மேம்படுத்தப்பட்ட நீண்டதூரம் சென்று தாக்கும் ஏவுகணைகளை அனுப்பத் தயாராகி வருகிறது என்ற செய்திகள் வெளியான நிலையில் பைடன் இதை மறுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# கொரோனா கட்டுக்குள் வந்ததால் ஷாங்காய் நகரில் ஊரடங்கு நீக்கம்

## 2 மாதங்களுக்கு பிறகு பொது மக்கள் வெளியே வந்தனர்




ஷாங்காய் நகரில் கடந்த 2 மாதங்களாக அமுல்படுத்தப்பட்டு இருந்த ஊரடங்கு நேற்று நள்ளிரவு முதல் சில கட்டுப்பாடுகளுடன் விலக்கிக் கொள்ளப்பட்டது. சீனாவில் மக்கள் தொகை அதிகம் உள்ள நகரம் ஷாங்காய், இங்கு கொரோனா வைரஸ் தொற்று மீண்டும் பரவியதால் ஏப்ரல் 5ம் திகதி முதல் கடும் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டது.

முக்கிய சாலைகளுக்கு சீல் வைக்கப்பட்டது. சுகாதார பணியாளர்கள் தன்னார்வலர்கள் மற்றும் சிறப்பு அனுமதி பெற்றவர்கள் மட்டுமே பொதுவெளியில் நடமாட அனுமதிக்கப்பட்டன. உணவு, மருந்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்ட நிலையில், அத்தியாவசிய பொருள்களின் விநியோகமும் ஸ்தம்பித்தது.

இதனால் ஆத்திரம் அடைந்த மக்கள் பல இடங்களில் அரசு அதிகாரிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இந்த நிலையில் தொற்று ஓரளவுக்கு கட்டுப்பாட்டுக்குள் வந்ததை அடுத்து, நேற்று நள்ளிரவு முதல் ஊரடங்கு விலக்கிக் கொள்ளப்பட்டது. குடியிருப்பு வளாகங்களை சுற்றி அமைந்து இருந்த வேலிகளை ஷாங்காய் நிர்வாக அதிகாரிகள் அகற்றினர். இதையடுத்து காலை முதல் ஷாங்காயில் இயல்பு நிலை தொடங்கி உள்ளது. 2 மாதங்களுக்கு பிறகு மக்கள் வீடுகளை விட்டு வெளியே வர தொடங்கி உள்ளனர்.

ஊரடங்கு விலக்கிக் கொள்ளப்பட்டதை அடுத்து போக்குவரத்து தொடங்கியுள்ளதால் ஷாங்காயில் வசிக்கும் சுமார் 2 கோடி 50 லட்சம் மக்கள் நிம்மதி அடைந்துள்ளனர். இருப்பினும் பொது இடங்களுக்கு செல்லும் மக்கள் ஒவ்வொரு 72 மணி நேரத்திற்கும் ஒரு முறை கொரோனா பரிசோதனை செய்து கொரோனா இல்லை என்று முடிவுகள் பெற்று இருக்க வேண்டும் என்ற கட்டுப்பாட்டு விதிக்கப்பட்டுள்ளது.



# ஈரானிடம் உச்ச வரம்பை விட அதிக யுரேனியம்

## சர்வதேச அணுசக்தி முகமை எச்சரிக்கை

கடந்த 2015ஆம் ஆண்டு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுடன் போடப்பட்ட அணுசக்தி பரவல் ஒப்பந்தத்தின்படி ஈரான் 300 கிலோ யுரேனியத்தை மட்டுமே வைத்திருக்க வேண்டும் என உச்ச வரம்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் தற்போது ஈரான் 3,809 கிலோ செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை கையிருப்பு வைத்துள்ளதாக சர்வதேச அணுசக்தி முகமை குற்றம்சாட்டியுள்ளது.

இது ஈரானுக்கு நிர்ணயிக்கப்பட்ட உச்ச வரம்பை விட 13 மடங்கு அதிக யுரேனியம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஈரானின் செறிவூட்டப்பட்ட யுரேனிய உலோக உற்பத்தி பல மடங்கு அதிகரித்துள்ளதாகவும் சர்வதேச அணுசக்தி முகமை எச்சரித்துள்ளது. யுரேனிய உலோகத்தை கொண்டு அணு ஆயுதங்களை தயாரிக்க முடியும் என்பதால், இவற்றை கட்டுப்படுத்த வேண்டும் என அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் கவலை தெரிவித்து வருகின்றன.

# வேலைப்பாதுகாப்பு மற்றும் பொருளாதார வளத்தையே இந்தியா விரும்புவதாக ராகுல் காந்தி டுவிட்டர் பதிவு



இந்திய மத்திய கலாச்சார அமைச்சகம் இந்திய மரபணு வரலாறு மற்றும் இந்தியாவில் இனத்தின் தூய்மை குறித்த ஆய்வுத் திட்டத்திற்காக டி.என்.ஏ. விவரக்குறிப்புக் கருவிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அதிநவீன இயந்திரங்களை வாங்கத் திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையில், கர்நாடகாவின் முன்னாள் முதலமைச்சரும் அம்மாநில காங்கிரஸ் தலைவருமான சித்தராமையா, ஜவஹர்லால் நேருவின் நினைவு தினத்தை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்ச்சியில் உரையாற்றியபோது, ஆர்.எஸ்.எஸ். காரர்கள் பூர்வீக இந்தியர்களா? என கேள்வி எழுப்பியிருந்தார்.

இந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் ஆரியர்களா? அல்லது திராவிடர்களா? என்பது குறித்து ஆய்வு செய்யப்பட வேண்டும் என்றும், ஆர்.எஸ்.எஸ். என்பது இந்தியர்களின் அமைப்பு அல்ல, என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

இந்த விடயம் தற்போது சர்ச்சையைக் கிளப்பியுள்ள நிலையில், இது குறித்து தமது டுவிட்டர் பக்கத்தில் கருத்துத் தெரிவித்துள்ள காங்கிரஸ் எம்.பியும் அக்கட்சியின் முன்னாள் தலைவருமான ராகுல்காந்தி, இந்தியாவானது வேலைப் பாதுகாப்பு மற்றும் பொருளாதார வளத்தையே விரும்புகிறது என்றும் இனத் தூய்மையை அல்ல, என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# லெஸ்பியன் ஜோடி சேர்ந்து வாழ கேரளா உயர்நீதிமன்றம் அனுமதி







கேரளாவைச் சேர்ந்த 22 வயதான அதிலா நஸ்ரினும், 23 வயதான பாத்திமா நூராவும் பாடசாலை நாள்களில் இருந்தே உறவு முறையில் பழகி வந்துள்ளனர். அவர்களது நட்பு கல்லூரி காலத்திலும் தொடர்ந்துள்ளது. பட்டப்படிப்பு முடிந்ததும், பிரிய மனமின்றி இருவரும் தம்பதியினர் போல் ஒன்றாக வாழ முடிவு செய்து வீட்டை விட்டு வெளியேறி தனியாக வீடு எடுத்து தங்கியிருந்தனர்.

இது குறித்த அறிந்த இரு குடும்பத்தினரும் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இந்த நிலையில் கடந்த வாரம் பாத்திமா அவரது உறவினர்களால் கடத்தப்பட்டுள்ளார்.

இதையடுத்து உயர்நீதிமன்றத்தில் அதிலா ஆட்கொணர்வு மனுவினைத் தாக்கல் செய்தார். அதில், தானும் தனது துணைவியார் பாத்திமா நூராவும் குடும்பத்தினரால் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் சித்திரவதை செய்யப்பட்டோம் என தெரிவித்திருந்தார். தன்னுடன் தங்குவதற்காக ஆலுவாவுக்கு வந்த பாத்திமாவை அவரது குடும்பத்தினர் கடத்திச் சென்றனர் எனவும், அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்த மனுவை விசாரித்த கேரளா உயர்நீதிமன்றம், பாத்திமா நூராவை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பொலிஸாருக்கு உத்தரவிட்டது. அதே நேரத்தில் மனுதாரர் ஆதிலா நஸ்ரினும் நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார். இதையடுத்து நேற்று நடைபெற்ற விசாரணையின் முடிவில் லெஸ்பியன் ஜோடி ஒன்றாக வாழ்வதற்கு தடையில்லை, என்று நீதிபதி வினோத் சந்திரன் உத்தரவிட்டார்.

அத்துடன் ஆட்கொணர்வு மனு குறித்த வழக்கையும் அவர் முடித்து வைத்தார். இந்த தீர்ப்பு குறித்து ஊடகவியலாளர்களோடு உரையாடிய அதிலா, ஓரினச் சேர்க்கையாளர்கள் சமூகத்திடமிருந்து தங்களுக்கு ஆதரவு கிடைத்துள்ளதாகவும், கேரள உயர் நீதிமன்ற உத்தரவால் தாங்கள் மகிழ்ச்சியாகவும் சுதந்திரமாகவும் இருக்கமுடியுமென நம்புகிறோம் எனவும் கூறினார். எனினும், தங்கள் குடும்பங்கள் இன்னும் தங்களை அச்சுறுத்தி வருகின்றமையால், தாங்கள் முற்றிலும் சுதந்திரமாக இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கொல்கத்தா நிகழ்ச்சியில் பங்கேற்றபோது மாரடைப்பு பிரபல திரையுலகப் பின்னணிப் பாடகர் கேகே மரணம்



இந்தியத் திரையுலகின் பன் மொழிப் பாடகர்களில் ஒருவரான கேரளாவை சேர்ந்த கேகே என்று அழைக்கப்படும் பாடகர் கிருஷ்ணகுமார் குன் னத், தனது 53 ஆவது வயதில் மாரடைப்பால் காலமானார். ஹிந்தி, தமிழ், தெலுங்கு, கன்னடம் மற்றும் பெங்காலி உள்ளிட்ட பல மொழிகளில் பாடல்களைப் பாடியுள்ள கேகே, தமிழ் சினிமாவில் 50க்கும் மேற்பட்ட பாடல்களை பாடியுள்ளார். திரைத்துறையில் அறிமுகமாவதற்கு முன்னர் 3,500 க்கும் மேற்பட்ட விளம்பரங் களுக்கும் அவர் பாடல்களைப் பாடியுள்ளார்.

இசையமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மான் இசையில் 1997 ஆம் ஆண்டு வெளியான மின்சாரக் கனவு படத்தில் இடம் பெற்ற ஸ்ட்ரோபெரி கண்ணே என்ற பாடல் மூலம் தமிழில் கேகே அறிமுகமானார். யுவன் சங்கர் ராஜா, தேவா, வித்யா சாகர், மணி சர்மா, ஹரிஸ் ஜெயராஜ் உள்ளிட்டோரின் இசையிலும் தமிழில் அவர் பாடியுள்ளார்.

காதல் வளர்த்தேன் (மன்மதன்), அப்படிப் போடு (கில்லி), காதலிக்கும் ஆசை (செல்லமே), நினைத்து நினைத்து (7 ஜி ரெயின்போ காலனி), உயிரின் உயிரே (காக்க காக்க) உள்ளிட்ட அவர் பாடிய திரைப் பாடல்கள் தமிழ் ரசிகர்கள் மத்தியில் மிகப் பிரபலமானவை.

கொல்கத்தா மாநகரின் நஸ்ருல் மஞ்சா பகுதியில் நடைபெற்ற இசை நிகழ்ச்சியில் பங்கேற்ற கேகே, ரசிகர்கள் முன்னிலையில் பாடல்களைப் பாடியிருந்தார். கச்சேரி முடிந்ததும் மயங்கி விழுந்த அவர் அருகில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டபோது, அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள் அவர் மாரடைப்பால் உயிரிழந்துவிட்டார் என தெரிவித்துள்ளனர். அவர் கடைசியாக பங்கேற்றிருந்த மேடை இசை நிகழ்ச்சி குறித்த காணொலிகள் தற்போது சமூக வலைத் தளங்களில் அதிகளவில் பகிரப்பட்டு வருகின்றன.

பாடகர் கேகேவின் திடீர் மரணம் அவரது ரசிகர்கள் மத்தியில் அதிர்ச்சியையும் மிகுந்த சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது. அவரது மறைவுக்கு பல பிரமுகர்களும் தமது இரங்கலைத் தெரிவித்துள்ளனர்.

இந்தியப் பிரதமர் மோடி வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், பிரபல பாடகர் கேகேயின் அகால மறைவு வருத்தமளிக்கிறது. அனைத்து வயதினரையும் கவர்ந்த அவரது பாடல்கள் பலவிதமான உணர்ச்சிகளைப் பிரதிபலித்தன. அவரது பாடல்கள் மூலம் நாம் எப்போதும் அவரை நினைவில் கொள்வோம். அவரது குடும்பத்தினருக்கும் ரசிகர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்கள், என்று தெரிவித்துள்ளார். இந்தியக் குடியரசுத் துணைத்தலைவர் வெங்கையா நாயுடு, மத்திய அமைச்சர்கள் அமித்ஷா, அனுராக் தாக்கூர், சக பாடக பாடகிகள், இசையமைப்பாளர்கள், ஏனைய திரையுலகினர், கிரிக்கெட் வீரர் விரேந்திர சேவாக் உள்ளிட்டோர் அவரது மறைவுக்கு தமது வருத்தங்களை வெளியிட்டுள்ளனர்.



# அதிநவீன அஸ்திரா ஏவுகணைகள் விமானப்படைக்கு கொள்வனவு

இந்திய விமானப்படை மற்றும் கடற்படைக்கு 2,971 கோடி ரூபா செலவில் அஸ்திரா ஏவுகணைகளை வாங்குவதற்கு இந்தியப் பாதுகாப்புத் துறை ஒப்பந்தம் செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதற்கமைவாக பாரத் டைனமிக்ஸ் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது என இந்திய மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தனது சமூக வலைத்தளப்பதிவில் தெரிவித்துள்ளார்.

இந்திய ராணுவத்திற்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் ஆயுதங்கள் அனைத்தும் உள்நாட்டு தொழில்நுட்பத்தின் மூலம் இந்தியாவிலேயே தயாரிக்கப்படுகின்றன.

அதிநவீன அஸ்திரா ஏவுகணையும் இந்தியாவின் தயாரிப்பு என்பது குறிப்பிடத்தக்கது.





# வன்கொடுமைகளுக்கு எதிராக திருமலையிலும் போராட்டம்

நாட்டில் அதிகரித்து வரும் சிறுவர்கள் மற்றும் பெண்களுக்கான வன்முறைகளை கண்டித்து திருகோணமலையிலும் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

அனைத்து வகையான வன்முறைகளிலிருந்தும் சிறுமியர் மற்றும் பெண்களை பாதுகாப்போம் எனும் தொனிப்பொருளில் வடக்குக் கிழக்கு பெண்கள் ஒன்றியம் ஏற்பாடு செய்த குறித்த அமைதி ஆர்ப்பாட்டம் திருகோணமலை மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்திற்கு முன்பாக நேற்று இடம்பெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் 'இது நீதிக்கான போராட்டம்', 'பச்சிளம் குழந்தைகளுக்கு ஏன் வன்கொடுமை?', 'சிறுவர்களுக்கும் பெண்களுக்கும் பாதுகாப்பை வழங்குங்கள்!' மற்றும் 'சிறுவர் துஷ்பிரயோகத்தை நிறுத்து!' போன்ற பதாதைகளை ஏந்தியவாறு குறித்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் திருகோணமலை மாவட்ட பெண்கள் வலையமைப்பு, வடக்குக் கிழக்கு பெண்கள் ஒன்றியம், திருகோணமலை மாவட்ட சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதே போன்ற போராட்டங்கள் நேற்றைய தினம் யாழ்ப்பாணம், வவுனியா உட்படப் பல இடங்களிலும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## புகைப்பொருள் ஒழிப்பு தினம்; மட்டக்களப்பில் விழிப்புணர்வு!



(க.கிருபாகரன்)

சர்வதேசப் புகைப்பொருள் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பில் விழிப்புணர்வு நடவடிக்கையொன்று நேற்று மட்டக்களப்பு நகர்ப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டது.

பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய அபாயகர கட்டுப்பாட்டுசபை மற்றும் மாவட்ட செயலக போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவு ஆகியன இணைந்து மட்டக்களப்பு மாவட்ட செயலாளரும் மாவட்ட அரசாங்க அதிபருமான கே.கருணாகரனது ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைவாக நேற்று மட்டக்களப்பு நகர் பகுதிகளில் போதைப்பொருள் தடுப்பு தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது சிகரட் குடி;செத்துடும் கிளி, நாளாந்தம் மரணிக்கும் சுமார் 60 பேருக்குப் பதிலாக 80 பேரையாவது புதிதாகப் பழக்குவதே சிகரட் கம்பனியின் முயற்சியாகும், அவதானமாக இருங்கள் அவர்களின் அடுத்த இலக்கு உமது குழந்தைகளே மற்றும் இக்கால பெண்கள் விரும்புவது சிகரட்புகைத்து, முகம் அவலட்சணமான, வாயில் துர்நாற்றம் வீசுபவர்களை அல்ல, எங்களைப் போல் சிமார்ட் ஆண்களையே போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட ஸ்டிக்கர்களை இதன்போது பொதுமக்களுக்கு தென்படும் வண்ணமாக வாகனங்களிலும், பொது இடங்கள் மற்றும் கடைகளிலும் காட்சிப்படுத்தப்பட்டன. வாழ்க்கை இன்பமானது – மகிழ்ச்சியை தக்க வைத்துக் கொள்ளுங்கள் எனும் தலைப்பிலான துண்டுப்பிரசுரங்கள் இதன்போது பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

உலக சுகாதார ஸ்தாபனம் 2022 ஆண்டுக்கான சர்வதேச புகைத்தல் தடுப்பு தினத்திற்கான உலகலாவிய கருப்பொருளாக புகைப்பொருள் நமது சுற்றுச்சூழலுக்கு அச்சுறுத்தலானது என பிரகடனம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு மாவட்ட செயலக போதைப் பொருள் தடுப்பு பிரிவின் மாவட்ட இணைப்பாளர் பீ.டினேஸ் தலைமையில் நடைபெற்ற இவ்விழிப்புணர்வு நடவடிக்கையை மட்டக்களப்பு மாவட்ட உதவி மாவட்ட செயலாளர் ஏ. நவேஸ்வரன் ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் மண்முனை வடக்கு மற்றும் காத்தான்குடி ஆகிய பிரதேச செயலகங்களின் போதைப்பொருள் தடுப்பு பிரிவின் உத்தியோகத்தர்களும், மாவட்ட செயலக உத்தியோகத்தர்களும், இராணுவத்தினரும் கலந்துகொண்டிருந்தனர்.




## பொலித்தீன் பாவனையற்ற பிரதேசமாக கோறளை மேற்கை மாற்ற நடவடிக்கை!

(க.கிருபாகரன்)

'கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபை பிரிவிற்–குட்பட்ட பகுதியை பொலித்தீன் பாவனையற்ற பிரதேசமாக மாற்ற ஒன்றிணைவோம்' எனும் தொனிப்பொருளில் பாரிய வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பொலித்தீன் பாவனையால் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் இருந்து விடுபடுதல் தொடர்பான விழிப்புணர்வு வேலைத்திட்டத்தை மட்டக்களப்பு வை.எம்.சீ.ஏ. மற்றும் சீ.பீ.எம். நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபையுடன் இணைந்து ஓட்டமாவடி சிகரம் மாற்றுத்திறனாளிகள் அமைப்பு முன்னெடுத்துள்ளது.

ஓட்டமாவடி பிரதேசத்தில் பொலித்தீன் பாவனை தொடர்பான விழிப்பூட்டல் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டமையுடன்,ஒலிபெருக்கி மூலம் பொதுமக்கள், வியாபாரிகளுக்கு அறிவுறுத்தல்களும் துண்டுப்பிரசுரங்களும் வழங்கப்பட்டன.

சிகரம் மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் தலைவர் என்.எம். இஸ்மாயில் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம். நௌபர் மற்றும் சனசமூக அபிவிருத்தி உத்தியோகஸ்த்தர் ஏ. காருன், மட்டக்களப்பு வை.எம்.சீ.ஏ. நிறுவனத்தின் இணைப்பாளர் அன்பழகன் மற்றும் நிறுவனங்களின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## தேவிலாமுனை ஸ்ரீ நரசிம்மகாளி அம்மன் ஆலய கும்பாபிஷேகம்

(க.கிருபாகரன்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகப்பிரிவிற்குட்பட்ட கொல்லனுலை தேவிலாமுனை ஸ்ரீ நரசிம்மகாளி அம்மன் ஆலய புனராவர்த்தன நூதன அஷ்டபந்தன பஞ்சகுண்ட பட் மகா கும்பாபிஷேகம் இன்று கிரியைகளுடன் ஆரம்பமாகிறது . நாளை வியாழக்கிழமை எண்ணெய்காப்பு சாத்தும் நிகழ்வும், அடுத்த நாள் வெள்ளிக்கிழமை அதிகாலை கும்பாபிஷேகமும் நடைபெற உள்ளன என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர்.

கும்பாபிஷேகத்தினை தொடர்ந்து, 11நாள்கள் மண்டலாபிஷேகப் பூசைகள் இடம்பெற்று 16 ஆம் திகதி பாற்குட பவனியும், பாலாபிஷேகமும், சங்காபிஷேகமும் நடைபெற உள்ளன.




காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# அரசியல் உறுதிப்பாட்டை இலக்காகக்கொண்டே 21 ஆவது திருத்தத்தை நாம் சமர்ப்பித்தோம்!

## ருவான் விஜேவர்தன தெரிவித்தார்



தற்போது நாடு முகங்கொடுத்திருக்கும் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கு அரசியல் உறுதிப்பாட்டை நிலைநாட்டுவது அவசியம் என்பதால், அதனை முன்னிறுத்தி அரசமைப்பிற்கான 21 ஆவது திருத்தச்சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித்தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

அதுமாத்திரமன்றி நாடாளுமன்றத்தை வலுப்படுத்துவதற்காக 15 குழுக்களை ஸ்தாபிப்பதற்கு பிரதமர் திட்டமிட்டிருக்கிறார் எனவும், அந்தக் குழுக்களில் தற்போது போராட்டங்களில் ஈடுபட்டுவரும் இளைஞர், யுவதிகளையும் இணைத்துக்கொள்வதற்கு அவர் தயாராக இருக்கிறார் எனவும் ருவான் விஜேவர்தன மேலும் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் கட்சியின் செயற்பாட்டாளர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே ருவான் விஜேவர்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு –

பிரதமராகப் பதவியேற்றுக்கொள்வதை அனைத்துத் தரப்பினரும் நிராகரித்த சூழ்நிலையிலேயே எமது கட்சியின் தலைவர் பிரதமராகப் பதவியேற்றுக்கொண்டார்.

இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கு அனைவரும் அஞ்சினார்கள்.ஏனெனில் அக்காலப்பகுதியில் நாடு மிகமோசமான நெருக்கடிக்கு முகங்கொடுத்திருந்தது. அதன்காரணமாகவே வெளியே புலப்படாத அளவிற்கு நாட்டின் பொருளாதாரம் வெகுவாக வீழ்ச்சியடைந்து செல்வதாகப் பிரதமர் கூறினார்.

எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசியப்பொருள்களைப் பெற்றுக் கொள்வதற்கு மக்கள் நீண்ட வரிசைகளில் காத்திருந்த காலப்பகுதியிலேயே எமது கட்சியின் தலைவர் பிரதமர் பதவியைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

பொருளாதார நெருக்கடியின் விளைவாக நாளாந்தம் பொதுமக்கள் நெருக்கடிகளுக்கு உள்ளாவதைத் தடுப்பதற்காகவே அவர் பிரதமராகப் பதவியேற்றார். அவர் தீப்பந்தமொன்றைக் கையிலெடுத்துக்கொண்டார் என்றே நான் கருதுகின்றேன். அந்தத் தீப்பந்தத்தை அணைத்தால் அவர் மாத்திரமன்றி, ஒட்டுமொத்த நாடும் வெற்றியடையும்.

அதன்படி இப்போது பிரதமர் பொருளாதார நெருக்கடியைப் படிப்படியாகக் குறைத்துவருகின்றார் என்ற விடயத்தை அனைவரும் அறிந்திருக்கின்றார்கள். அத்தியாவசியப் பொருள்களுக்கான வரிசைகள் படிப்படியாகக் குறைக்கப்பட்டு வருகின்றன. எதுஎவ்வாறெனினும் எம்மால் இந்தப் போராட்டத்தில் தனியாக வெற்றியடைய முடியாது.

எனவே எமக்கு சர்வதேச சமூகத்தின் உதவிகள்இன்றியமையாததவையாகும். அதற்கு நாம் ஜனநாயகத்தைப் பாதுகாக்கின்ற நாடு என்ற விடயத்தை வெளிப்படுத்தும் வகையில் செயற்படவேண்டும்.

நாடளாவிய ரீதியில் வீதிகளில் இறங்கிப்போராடிய மக்கள் நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையில் உள்ள மிதமிஞ்சிய அதிகாரங்களைக் குறைக்குமாறுவலியுறுத்திவருகின்றார்கள். குறிப்பாக அரசமைப்பிற்கான 20 ஆவது திருத்தத்தை நீக்கி, மீண்டும் 19 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு அவர்கள் கோருகின்றார்கள்.

அதன்காரணமாக 19 ஆவது திருத்தத்தில் காணப்படும் குறைபாடுகளை நீக்கி, அரசமைப்பிற்கான 21 ஆவது திருத்தச்சட்டமூலத்தை சமர்ப்பிப்பதற்கு பிரதமர் நடவடிக்கை எடுத்திருக்கின்றார். நிதியமைச்சர் இது தொடர்பாக நாட்டின் அனைத்துத்தரப்பினருக்கும் விளக்கமளித்துவருகின்றார். நாட்டின் பொதுநிதியை நிர்வகிக்கும் அதிகாரம் நாடாளுமன்றத்திற்கே இருக்கின்றது. ஆனால் கடந்த காலத்தில் அந்த அதிகாரம் நாடாளுமன்றத்தின் வசமிருந்து நழுவிச்சென்றது. அதனைமீண்டும்வலுப்படுத்தும்வகையில் நாம் 21 ஆவது திருத்தத்தை முன்வைத்திருக்கின்றோம். அதேவேளை பிரதமர் 5 நாடாளுமன்ற செயற்குழுக்களை நியமிக்கவுள்ளார்.

அந்தக்குழுக்களுக்கு நாட்டின் இளைய சமுதாயத்தைத் தலைமைதாங்கச் செய்வதற்கான முயற்சிகளை பிரதமர் முன்னெடுத்துவருகின்றார். அதன்படி ஒவ்வொரு குழுக்களிலும் இளைய சமுதாயத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நால்வர் நியமிக்கப்படுவர் என்று தெரிவித்தார்.

# ஆயிஷா கொலையை கண்டித்து கிளிநொச்சியிலும் ஆர்ப்பாட்டம்







பண்டாரகம – அட்டலுகம சிறுமி பாத்திமா ஆயிஷா கொலையை கண்டித்து கிளிநொச்சியில் நேற்று கண்டன போராட்டம் இடம்பெற்றது.

கிளிநொச்சி பழைய மாவட்ட செயலக முன்பக்க ஏ– 9 வீதியில் வடக்கு கிழக்கு பெண்கள் ஒன்றியத்தினரால் இந்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது. போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கிளிநொச்சி பழைய மாவட்ட செயலகத்திலிருந்து பேரணியாக புறப்பட்டு மாவட்டச் செயலகத்திற்கு சென்று மாவட்டச் செயலாளர் திருமதி றூபவதி கேதீஸ்வரனிடம் மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

# புங்குடுதீவில் 40 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கல்






புங்குடுதீவில் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட 40 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கிவைக்கப்பட்டன.

வடிவேல் சுப்பையா அவர்களின் 67 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு சுவிற்ஸர்லாந்தில் வசிக்கும்அவரதுகுடும்பத்தினரால்இந்தஉலருணவுப் பொதிகள் வழங்குவதற்கான அனுசரணை வழங்கப்பட்டது. இந்த உலருணவுப் பொதிகளை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்தியகுழு உறுப்பினர்கலாநிதிஅகிலன்முத்துக்குமாரசுவாமியும், வேலணைப்பிரதேசசபைஉறுப்பினர்கருணாகரன் நாவலனும் இணைந்து வழங்கிவைத்தனர்.







# ஆயிஷாவின் மரணத்துக்கு நீதி கோரி மன்னாரிலும் நேற்று போராட்டம் நடந்தது

சிறுமி ஆயிஷாவின் மரணத்திற்கு நீதி கோரி நேற்று (செவ்வாய்க்கிழமை) மன்னாரில் கவனவீர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கு பெண்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நீதிக்கான போராட்டம் வடக்கு,கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

அதற்கமைய, மன்னார் மாவட்டச் செயலகத்துக்கு முன்பாகவும் நேற்று காலை 10.30 மணியளவில் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

பெண்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளடங்கலாக பல நூற்றுக்கணக்கான பெண்கள், இளைஞர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் ஒன்றிணைந்து போராட்டத்தை முன்னெடுத்தனர்.

சிறுமி ஆயிஷாவின் மரணத்திற்குநீதிகோரியும்தொடர்ச்சியாக நாட்டில் இடம்பெறும் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்கவும் அவ்வாறான செயற்பாடுகளால் பாதிக்கப்படும் பெண்கள் சிறுவர்களுக்கு விரைவில் நீதி நிலைநாட்டப்பட வேண்டும் போன்ற பல்வேறு கோரிக்கைகளை முன்னிறுத்தி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.05.2022இல் வெளியிடப்பெற்றது.